JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# அல்லி நகரம் தாமோதரனின் மாலை சூடும் அரும்புகள் படைப்பில் பெண்களின் நிலை

## The status of women in Allinagaram Damodaran's literary work 'Malai Soodum Arumbugal'

**முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 5. தமிழ்நாடு, இந்தியா, பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, சேலம், தமிழ்நாடு, இந்தியா.**

**Dr.V.GOPALAKRISHNAN,**
**Assistant Professor, Department of Tamil, Sona College of Arts and Science, Salem-5, Tamil Nadu, India. Affliated to Periyar University, Salem, Tamil Nadu. India,**
**Mail: rasaigopi@gmail.com**
**Orcid: https://orcid.org/0000-0002-9465-4421**

**Research Summary**

The status of women has remained low from ancient times to the present day. It is said that there were more than thirty female poets in Sangam literature. However, the status of women remained underdeveloped in Sangam literature. The same situation prevailed in the epics that followed, where the plight of women is depicted as miserable. While major epics like Silappathikaram and Manimekalai highlight the plight of women, other epics and Puranas also point to the suffering of women. We see that the same situation prevails in contemporary creative literature, particularly in poetry, short stories, novels, and plays, where it forms the central theme. Just as the plight of women, from the heroines and their companions in Sangam literature to characters like Kannagi and Madhavi in epics, was tragic, women in contemporary literature also face many hardships, reflecting the challenges of their time. The purpose of this research paper is to examine this topic in the short story collection titled 'Buds that Adorn the Garland'.

**Keywords:** Women, female slavery, female slavery in literature, child marriage, male suffering, suffering of a woman abandoned by her husband, remarriage, condition of elderly women, dowry

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்கள் நிலை என்பது அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் சங்க இலக்கியத்தில் பெண்களின் நிலை வளர்ச்சியற்றே இருந்தது. அதே நிலைதான் அதற்கு பிறகு வந்த காப்பியங்களிலும் பெண்களின் நிலை அவலமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற முதன்மைக் காப்பியங்களும் பெண்களின் அவலத்தை சுட்டும்போது மற்ற காப்பியங்களும், புராணங்களும் பெண்களின் அவலத்தைச் சுட்டி நிற்கிறது. இதே நிலை தான் இன்றைய படைப்பிலக்கியங்களிலும்

குறிப்பாக கவிதை, சிறுகதை, புதினம், நாடகம் ஆகியவற்றிலும் கதைக் கருவாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். சங்க இலக்கியத்திலிருந்து தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகியோர்கள் முதற்கொண்டு காவியங்களில் கண்ணகி, மாதவி, மணிமேகலை, ஆதிரை, சீதை போன்ற பெண்களின் நிலை அவலமாக இருந்ததைப் போல இன்றைய இலக்கியங்களிலும், காலத்திற்கு ஏற்றவாறு பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இதைப்பற்றி மாலை சூடும் அரும்புகள் என்னும் சிறுகதைத் தொகுப்பில் காண்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** பெண்ணடிமை, இலக்கியங்களில் பெண்ணடிமை, குழந்தைத் திருமணம், ஆடவர் இன்னல், கணவனால் கைவிடப்பட்ட பெண்ணின் இன்னல், மறுமணம், முதுமைப் பெண்களின் நிலை, வரதட்சனை.

பெண் என்பவள் காலந்தோறும் அடிமைப்பட்டு வாழ்ந்தவளாக இருக்கிறாள். இதனை தமிழ் இலக்கியங்களின் வழி அறியலாம். பெண்கள் தனித்து வாழ்பவர்களாக இருக்க முடியாது என்பதால் பிறரைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் பெண்கள் அடிமையாக இருக்கின்றனர். கணவனிடம் மனைவியாகவும், சகோதரனிடம் சகோதரியாகவும், தந்தையிடம் மகளாகவும், சமுதாயத்தில் பொருளாகவும் போன்ற நிலைகளில் பின்தங்கிய நிலையிலும் எதையும் எதிர்த்துப் பேச முடியாதவர்களாக உள்ளனர். இன்றும் ஆண்களிடம் அடங்கிப்போக வேண்டிய கட்டாய சூழ்நிலை பெண்களிடம் வெளிப்படையாகவே அமைந்துள்ளது.

## பெண்ணடிமை

ஒன்றை அடைய வேண்டும் என்றால் கூட்டு முயற்சி தேவைப்படும். ஆகவே வாழ்க்கையை இனியதாக்க வேண்டும் என்றால் ஆண் பெண் ஆகியோரின் கூட்டு முயற்சியும் இன்றியமையாததாகும். அவ்வாறு கூட்டாக வாழும்போது அடிமைத்தனமும் வேரூன்றி விடுகின்றது. இதனை, “ஆண், பெண் இருவரின் சமூகக் கூட்டு நடவடிக்கைகளை அறிய முனைகிறபோது அது ஆணிற்கு வேறானதாகவும் பெண்ணிற்கு வேறானதாகவும் கற்பிக்கப்பட்டிருப்பதை உணர முடிகிறது. ஆண் சமூகத்தில் உயர்ந்த இடத்தையும் பெண் அவனுக்குக் கீழான நிலையிலும் இருப்பதைத் தெளிவாக்குகின்றது.”[1] என்பதன் மூலம் ஆண் பெண்ணை அடிமைத்தளத்திற்கு இட்டுச் செல்வது வாழ்க்கை ஒப்பந்தமேயாகும். ஆகவே, “மனிதகுலப் பரிணாம வளர்ச்சியின் உயிர் நாடியாகப் பெண் திகழ்வதோடு, சமுதாயத்தின் முக்கிய ஆக்கப் பணிகளிளெல்லாம் பெண் முதன்மை இடம் பெற்றிருந்தாள்”[2] என்று ஒவ்வொரு ஆணும் நினைத்தால் பெண்ணடிமைத்தனம் சமுதாயத்தில் மறையும் என்பதில் சிறிதும் மாற்றமில்லை. அதே சமயத்தில் பெண் என்பவள், “தெய்வம் என்பதால் தான் ‘பழையோள்’ என்று பண்டை இலக்கியங்களில் குறிக்கப் பெற்றாள். மணிமேகலையில் இவள் இருக்குமிடம் ‘முதியோள் கோட்டம்’ என்று குறிக்கப்பட்டது.”[3] எனக் கூறப்படுவதால் பெண்ணை தெய்வமாக எண்ணி அடிமைத்தனத்தை ஆண்கள் விடவேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. ஆகவே, பெண்ணடிமைத்தனம் சமூகத்திலிருந்து மறையவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் பெண்ணை ஒரு பொருளாகப் பார்க்கின்ற பார்வையினை முதலில் மாற்றிக்கொள்ளவேண்டும்.

## இலக்கியங்களில் பெண்ணடிமை

பெண்ணினம் காலந்தோறும் அடிமைப்பட்டுக்கிடந்த நிலையினைப் பற்றி தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியம், பக்தியிலக்கியம் போன்ற இலக்கியங்களில் மறைந்துகிடக்கின்றது. இவற்றை ஆய்வுலகமும் ஆராய்ந்து கூறியுள்ளது. தமிழ் இலக்கியத்தின் தொன்மையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் ஆண்களைப் பற்றி,

"பெருமையும் உரனும் ஆடுஉமேன"4

என்று பெருமையும் வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும் கூறியிருப்பது பெண்களை அடிமைப்பட்ட நிலையை மறைமுகமாகச் சொல்லப்பட்டதை அறியமுடிகிறது. மேலும்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய"5

என்று பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்படுகிறது. மேலும், கற்பு என்பது பெண்ணினத்திற்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதோடு மட்டுமல்லாது பெண்ணை அடக்கியும் வைக்கப்பட்டிருந்தனர். கற்பினை வலுவாக வலியுறுத்தும் விதமாக,

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"6

என்று வள்ளுவர் கூறுவதிலிருந்து குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்று வலியுறுத்துவதை அறியமுடிகிறது. நீதி நூல்களிலிருந்து காப்பியங்களிலும் அறவழியில் வாழ்க்கை நடத்துதல், இல்லறத்தைப் பேணிக்காத்தல், கணவனைத் தெய்வமாக வழிபடல் ஆகியன பெண்ணின் கடமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் ஆண்கள் குடும்ப வளத்தைக் காக்கக்கூடிய நிலையில் கற்புடன் திகழும் பெண்களைத் தெய்வமாகக் கருதுகின்றனர். ஆனால் மூடப் பழக்கவழக்கங்களைச் சாடும் சித்தர்கள் பெண்களை வெறும் இன்பத்தைத் தரும் போகப் பொருளாகவும், பேய் என்றும் வேறுவிதமாகக் கூறுகின்றனர். பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தும் புராணக்காலத்தில் பெண்ணின் நிலை மேலும் தாழ்நிலை அடைந்துள்ளதை காப்பிய புராண வழியிலும் நாம் அறிந்துகொள்ளலாம். அதற்குப் பின்னர் சிற்றிலக்கியங்களில் 'பதிவிரதை' என்ற கொள்கையை வரையறுத்ததோடு பெண்ணைப் பாலியல் பொருளாகக் கருதினர். மேற்கண்ட நிலைகளைக் காணும்போது பெண் என்பவளை அடிமைக்கு உட்படுத்தியே இலக்கியங்களிலும் ஆளப்பட்டிருப்பதை இதன் மூலம் அறிகின்றோம்.

ஆகவே, ஆரம்ப காலம் முதலே பெண்ணினம் அடிமைப்பட்டு வாழ்ந்திருந்த நிலையினைச் சங்க இலக்கியம் முதற்கொண்டு அறிகின்றோம். பெண்ணடிமை நிலை இலக்கியங்களில் பதிவாகி இருந்தாலும், அதே போன்ற நிலை இக்கால இல்ககியங்களாகக் கருதப்படுகின்ற படைப்பிலக்கியங்களில் பிரதிபளிப்பதைக் காணமுடிகிறது. மாலை சூடும் அரும்புகள் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இந்நிலை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, வனப்பேச்சி, சந்திரா, பூவாத்தாள், கருத்தம்மா, கோதை கிழவி, பெயர் குறிப்பிடாத ஒரு பெண் ஆகிய பெண் பாத்திரங்களின் வழி குழந்தைத் திருமணம், ஆடவர்களின் இன்னல், மறுமணம், வரதட்சனைக் கொடுமை, விதவைகளின் இன்னல், முதுமைப் பெண்களின் நிலை ஆகிய பல்வேறு விதங்களைப் பற்றி மாலை சூடும் அரும்புகள், ஓடிப்போனவள், இன்னொருவனுடன், இன்னும் பெண்கள், கருத்தம்மாள், துளிர்க்கும் சருகுகள் ஆகிய கதைகளின் மூலம் காணலாம்.

## குழந்தைத் திருமணம்

குழந்தைத் திருமணம் என்னும் கருத்தை மாலை சூடும் அரும்புகள் என்ற கதை முன் நிறுத்துகின்றது. இக்கதையின் தலைப்புக்கு ஏற்றவாறு அல்லிநகரம் தாமோதரன் அவர்கள் கதைக் கருவை அமைத்துள்ளார். இதனை, வனப்பேச்சி என்னும் கதாப்பாத்திரம் மூலம் காணலாம். இவள் குழந்தையாக இருக்கும் பொழுதே மாசானம் என்பவனுடன் திருமணம் நடந்தது. இதனை, “எதுக்குடா இப்படி கிறுக்குப் பய கணக்கா பேசுற…? அன்னக்கி நம்ப குலதெய்வக் கோயில்ல அம்புட்டு சனங்க முன்னால அந்தப் பச்ச மண்ணு கழுத்துல தாலியக் கட்டிப்புட்டு இப்ப அவள யாருன்னே தெரியாத கணக்கா பேசுறியே. ஏதோ காலக் கெரகத்தால நீங்க ரெண்டு பேரும் பிரியும்படியா ஆயிருக்சு. அதுக்காக அந்தக் கல்யாணம் பொய்யின்னு ஆயிருமா? கிழவியின் சுருங்கிச் சிறுத்த கண்களில் நீர் பெருக்கெடுத்தது. நாதழுதழுத்தது.”7 மேலும், வனப்பேச்சியின் வருத்தத்தை தன் பாட்டியிடம் சொல்லி தன் மனக்காயத்திற்கு மருந்துபோடும் விதமாகப் பேசியதை, “எனக்கு இங்க இருக்கவே புடிக்கல பாட்டி. ஏதாச்சும் வெக்ஷத்தக் குடிச்சுச் செத்துப் போயிறலாம்னு தோனுது. என்னை எதுக்கு இங்க அடைச்சு வச்சிருக்காங்க. நா அப்படி என்னதான் தப்புப் பண்ணிட்டேன்னு’னு அழுதா. என்ன நடந்துச்சுன்னே புரிபடாம தேம்பினா. நாந்தேன் ‘ஒண்ணுங் கவலைப்படாத தாயீ. சீக்கிரமே ஒனக்கு நல்லது நடக்கும்’னு சொல்லித் தேத்தி, அஞ்சாறு வடையும் அரை கிலோ சேவும் வாங்கிக் குடுத்துட்டு அப்படியே திருப்பூரு பஸ்ஸப் புடிச்சு இங்க ஓடியாந்தேன்”8 என்னும் கதையோட்டத்தின் மூலம் நாம் காணலாம். இவற்றினைக் காணும் போது குழந்தையாக இருக்கும் வனப்பேச்சிக்கு முதிர்ந்த வயதுடைய ஒரு ஆணை திருமணம் செய்து வைப்பது பெண்ணித்திற்கே வந்த மாபெரும் கேடாக இதனைக் காணலாம். அதனால்தான்,

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்”9

என்று கூறிய பாரதியின் கவிதைகள் வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெறுவதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இறுதியில் வனப்பேச்சி என்பவளை குழந்தைக் காப்பகத்திற்க்கு அனுப்புவதும், மாசானம் என்பவன் வோறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதும் இக்கதையில் காணமுடிகிறது.

## ஆடவர் இன்னல்

முருகேசன் என்பவன் தினமும் குடித்துவிட்டு அவன் மனைவி சந்திராவை அடித்தும் உதைத்தும் கொடுமைப்படுத்தி வந்தான். ஒரு நாள் சந்திரா தன் கணவரின் அடி உதைக்கு பயந்து வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள். அவளைத் தேடிச்சென்ற முருகேசன் ஒரு நாள் ஹோட்டல் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த சந்திராவை நா இனி உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் என்றும் தன் உண்மையான பிரிவின் வலியோடு வா வீட்டுக்குப்போவோம் என்றான். இத்தகைய நிலை குறித்து “அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டு வந்து வாரத்தில் ஒரிரு நாட்களாவது அம்மா சந்திராவை கதறக் கதற அடித்துத் துன்புறுத்துவான் குமரேசன். காரணமேயின்றி கூட வசவுகளும் சவுக்கடி ரகமாயிருக்கும். உடலின் அனைத்துப் பாகங்களிலும் ரத்தக் காயம் கூட ஏற்பட்டிருக்கிறது. இந்த ரணப்பாடு தாளாது பலமுறை தற்கொலைக்கும் முயன்றிருக்கிறாள். வேலாயிக்கிழவிதான் அவளைக் கண்டமேனிக்கும் திட்டி கோபத்தைத் தணிப்பாள். அமராவதியை ஆளாக்கணும். கோவிச்சுட்டுப் போனா குடும்பம் கெட்டுரும் எனக் கேட்போரிடம் ஒப்புவிப்பாள் சந்திரா.”10 என்னும் கதையில் உள்ள செய்தியைக் கானும் போது தன் கணவனின் கொடுமையால் அல்லல் படுகின்ற ஒரு பெண்ணின் நிலையை சந்திரா என்னும் கதாப்பாத்திரம் நமக்கு

உணர்த்துவதைக் காணலாம். மேலும், “சந்திரா குமரேசனால் தாக்கப்படுகிற சமயங்களில் பல முறை அவர்களது வீட்டுப் பசுக்களில் பால் கறக்க வருகிற மாரிநாதன், குமரேசனின் கொலை வெறித் தாக்குதலிலிருந்து அவளைக் காப்பாற்றியிருக்கிறான். பொஞ்சாதிய அடிக்கறது நல்ல குணமில்லீங்க... என ஏதேதோ கூறி அவனை அமைதிப்படுத்துவான்”11 என்ற அறிவுரையின் வாயிலாக குமரேசன் திருந்தி தன் மனைவி மேல் அன்பு செலுத்த ஆரம்பிப்பதை ஓடிப்போனவள் என்ற கதையின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

## கணவனால் கைவிடப்பட்ட பெண்ணின் இன்னல்

கணவனால் கைவிடப்பட்ட பெண்ணின் துயரத்தை உணர்த்துவதாக கருத்தம்மா என்னும் கதை அமைந்துள்ளது. கணவனால் கைவிடப்பட்டுள்ள கருத்தம்மாவை மாரியப்பன் என்பவன் மற்ற ஆடவர்களிடம் தொடவிடாமல் தானே அடைக்களம் கொடுத்து குடும்பம் நடத்தி வந்தான். திடீரென்று கருத்தம்மாவை கைவிட்டதும் அந்தப் பெண் ஊர் நாட்டாமையிடம் நியாயம் கேட்டு ஐந்தாயிரம் ரூபாய் பெற்றாள். பிறகு ஒரு செங்கல் சூலைக்கு லாரியில் செங்கல் ஏற்றிச் செல்லும்போது விபத்தின்போது கருத்தம்மா இறந்துவிடுகிறாள். இக்கதையில் வரும் கருத்தம்மா ஆண்களுக்கு பொருளாக படைக்கப்பட்டிருப்பதை இக்கதை வாயிலாக அறிகிறோம். அதாவது, “கிழவனான பிரமன் தான் படைத்த திலோத்தமையின் அழகு வெள்ளத்தில் மூழ்கிக் காமுற்று நான்கு முகங்கொண்டு அவளை நோக்கினான். இங்கே திருஞானசம்பந்தர்-பதினாறு வயதுள்ளவரால் உயிர்ப்பிக்கப் பெற்ற பூம்பாவையார் திலோத்தமையினும் அழகுடையார் அவரைச் சம்பந்தர் எக்கருத்துடன் நோக்கினார்? சீ!சீ! புகலி வேந்தர் சிவம் பழுத்த பெருமான் ஆதலால் அவர் கண்ணுக்குப் பூம்பாவையார் கண்ணுதல் கருணை வெள்ளம் போலத் தோன்றினார் என்க. அங்கே நான்கு முகம். அகநோக்குடையர் எல்லாம் உணர் வோராதலின் அவர் முகத்துக்கு (நோக்குக்கு) அளவில்லை என்க. ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோட விபசாரம் செய்வதாயிற்று என வரும் கிறிஸ்து பெருமான் திருமொழி”12 என்னும் கூற்றை காணும் போது பெண்ணென்பவளை ஒரு உயிராகப் பார்க்காமல் பொருளாகப் பார்ப்பதால் அவளுடைய முன்னேற்றத்திற்க்குத் தடையாகவே இருக்கும் என்பதை கீழ்வரும் கூற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். “பெண்களை அழகினைக் கொண்டும் உடலைக் கொண்டும் ஆராதிப்பதும் காமத்தை கொண்டாடுவதும், தனது விருப்பம் சார்ந்த கற்பனைக்கேற்ப அவர்களைப் புனைந்து நடமாட விடுவதுமாக அவர்களின் எழுத்துகள் இருப்பது நமக்கு புலானாகிறது. புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் போன்றோரின் வேறொரு வரிசை பெண்களை வேறு விதமாகவும் அணுகிப் பார்த்திருக்கிறது. புதுமைப்பித்தனின் சாபவிமோசனம், பொன்னகரம், ஜெயகாந்தனின் ‘அக்னிப்பிரவேசம்’ போன்ற பல சிறுகதைகளை இவ்வகையான அணுகு முறைகளுக்கு சான்றாகச் சொல்லலாம்.”13 என்னும் படைப்பிலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கருத்தே இச்சிறுகதைத் தொகுப்பிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், “பெண்களின் அடிமை நிலைக்கும் பின்னடைவிற்கும் முதன்மைக் காரணங்கள் பொருளாதாரச் சார்பு நிலையும் தன்னுரிமை இன்மையுமாகும். குடும்பத்திலும், சமுதாயத்திலும் அளிக்கப்படும் இரண்டாம் நிலைப்பாடு பெண்களின் ஆளுமைத் திறன் மறுக்கப்படுதல் எப்போதும் சார்ந்து இருப்பவளாகவும் சலுகையை எதிர்பார்ப்பவளாகவும் இருத்தல் ஆகியன பெண்கள் தன்னுரிமை இழந்ததன் விளைவுகளாகவும். இந்தியாவின் மக்கட் தொகையில் பெரும்பங்கு நடுத்தர குடும்பமாகும். இந்த நடுத்தரக் குடும்பத்துப் பெண்கள்தாம் வாழவும் முடியாமல், விலகவும் முடியாமல்

மனத்துயரங்களுக்கும் அவலங்களுக்கும் ஆளாகின்றனர். இவர்களில் உழைக்கும் மகளிர் 15 கோடிக்கும் மேல் உள்ளனர்.”14 என்னும் கூற்றையும் காணும்போது பொருளாதாரத்தில் பின்தங்கியவள் ஆண்களுக்கு பொருளாகவே உள்ளனர் என்பதனைக் கருத்தம்மா எனும் கதை உணர்த்தி நிற்க்கிறது.

கதையில் கணவனால் கைவிடப்பட்ட கருத்தம்மாவை மாரியப்பன் தன் வசப்படுத்தி அவளை சீரளத்து தூக்கி எரிந்து விடுவதை “ஐயா இந்த ஊருக்கார ஆம்பளைங்க ரொம்ப பேருக்கு நான் முந்தானை விரிச்சது உண்மைதாங்க. என் பசிக் கொடுமைக்குப் பொழுதுக்கொரு புருக்ஷனைச் சேர்த்துக் கிட்டதும் நிஜம்தாங்க. ஆனா கடந்த ஒரு வருக்ஷமா மாரியப்பன் மொதலாளிதாங்க என்னைச் சொந்தப் பொண்டாட்டி கணக்கா, வேற யாரையும் தொடவுடாம என்னை வெச்சுக்கிட்டாருங்க. இப்ப வேணாம் கிறார். என் ஒடம்பில் இருந்த சாறையெல்லாம் பிழிஞ்செடுத்துட்டு வெறும் சக்கையா என்னைத் தூக்கி வீதியில் வீசிட் டாருங்க. என்னோட ஒடல் நிலை முன்னால மாதிரி இல்ல. மோசமாயிருச்சு. அதத் தேத்திச் சரியாக்கிக்கிட்டு, அப்புறம் தாங்க வேலைக்குப் போவணும். நான் அவரு சொத்து சொகத்துக்கெல்லாம் ஆசைப்படலீங்க. எனக்கு அஞ்சாயிரம் ரூபா குடுத்துறச் சொல்லுங்க. வெலகிக்கிறேன். இல்லேன்னா, என்னை அவரோட ரெண்டாவது பொண்டாடியாத் தாலி கட்டி ஏத்துக்கச் சொல்லுங்க.”15 எனக் கருத்தம்மா புலம்பி நியாயம் கேட்பதை கதையில் காண்கிறோம். அவளுடைய நியாயத்திற்கு வெற்றி கிடைத்தாலும் அவளுடைய உயிருக்கு இறுதியில் தோல்வியே கிடைப்பதை கதை கருத்தின் மூலம் தெளிவாகலாம்.

## மறுமணம்

மறுமணம் என்னும் கருத்தை இன்னொருவனுடன் என்ற கதை வலியுறுத்துகிறது. இக்கதையில் வரும் பெண்ணானவள் வேறொருவனை திருமணம் செய்து குடும்பம் நடத்தி வருவதை காண்கிறோம். இதனை எதிர் வீட்டிலிருக்கும் இன்ஜினியர் என்பவனுக்கு பிடிக்கவில்லை. அதனால் இருப்பினும் ராஜேந்திரனிடம் உதவி கேட்பதை கதையில் காணலாம். இதன் மூலம் மறுமணம் செய்து கொண்டவனை உலகம் தவறாக பார்த்தாலும் ஒரு சமயத்தில் அவனிடமே உதவி கேட்டு கரம் ஏந்தும் நிலை வரும் என்பதை இன்னொருவனும் என்ற கதை தெளிவாக நமக்கு உணர்த்துகிறது.

## முதுமைப் பெண்களின் நிலை

துளிர்க்கும் சருகள் என்ற கதையில் முதுமைப் பெண்களின் அவலம் பற்றி பேசப்பட்டுள்ளது. பெண்கள் அழகாக இருந்தாலும் ஆபத்து வருகிறது. வயதாகிப் போனாலும் மதிப்பில்லாமல் போகிறது என்ற மனிதனின் யதார்த்த உலகத்தை எடுத்துக்காட்டும் விதமாக ஆசிரியர் இக்கதையைப் படைத்துள்ளார். அழகில் ஆபத்தடையும் பெண்கள் குறித்து “அழகினால் பெண்கள் அல்லல்படுவதைப் பார்க்க முடியும். அழகே பெண்களுக்கு பெரிய ஆபத்தாய் முடிகின்றன. அழகினாலே வாழ்க்கையில் இன்னல் அடைபவர்கள் பெண்கள். அதுவும் அரிவையர் பருவத்தில் பெண்கள் அடையும் துன்பத்திற்கு அளவேயில்லை எனலாம்.”16 என்ற கருத்தை சீனிவாசன் அவர்கள் சுட்டுகிறார். முதுமையில் வரும் இன்னலை கதையாசிரியர் துளிர்க்கும் சருகுகள் என்ற கதையில் குறிப்பிடுகிறார். இதனை, “நரைச்ச முடியக் கருப்பா மாத்துறதுக்காக வாங்கி வந்து வெச்சிருக்குற அந்தக் கருப்பு மைய தலையில் பூசுவோமா… இல்லேன்னா இப்படியே இருந்துட்டுப் போவட்டுமா..? சட்டென்று ஒரு முடிவுக்கும் வர முடியாமல் ஹேர்-டை பாக்கெட்டை ஆவலும் வெறுப்புமாக இரு வேறு மனநிலையில் திரும்பத் திரும்பப் பார்த்தபடி இருந்தாள் கோதை கிழவி.”17

என்னும் கதை ஆரம்பத்தை கொண்டு கதையின் நிலையை அறியமுடிகிறது. அதாவது, வயதாகிவிட்டாள் சில கம்பெனிகளில் வேலைக்குப் பெண்களை எடுத்துக்கொள்வதில்லை. இதனால், முதுமைப் பெண்களின் வாழ்க்கை தள்ளாட்டமாக மாறிவிடுகிறது. முதுமையின் அடையாளம் தலை மயிர் நரைப்பதாகும். கோதை என்னும் பெண்ணுக்கு வயதாகிவிட்டது என்பதை அவளுடைய தலை முடி காட்டுகிறது. இதனால் கம்பெனியில் வேலைக்கு சேர்த்துக் கொள்வதில்லை. இதனால், அப்பெண் பொருளாதாரத்தில் பின்னுக்கு தள்ளப்படுகிறாள். மேலும், திருமணமாகிச் சென்ற தன் பெண்கள் இருவரும் வீட்டுக்கு வந்தால் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் பொய்யான உடல் தோற்றத்திற்க்கு ஆளாகிறாள். இதனை, “போதா வருமானத்தினாலும் பொறுப்பற்ற ஊதாரிக் கணவர்களாலும் அன்றாட ஜீவனப் பாட்டிற்கே அல்லோகல் லோலப்பட்டு அவ்வப்போது பண உதவி கேட்டுக் கண்களைக் கசக்கிக் கொண்டு வருகிற இரண்டு மகள்கள் என, பிரச்சினைகள் மொத்தமும் பிம்பமாய் மனக்கண்ணில் அணிவகுத்து நின்று பூதாகாரமாய்ப் பயமுறுத்த ‘ம்…ஹூம்… ஒரு நிமிக்ஷம்கூடத் தாமதிக்கக் கூடாது நரைச்ச முடியக் கறுப்பாக்கிக் கிட்டா கொஞ்ச வயசுப் பொம்பளை கணக்கா ஆயிறலாம். அப்புறம் யாரும் வேலைக்கு வேண்டாம்னுச் சொல்லமாட்டாங்க’ என்ற உள் மன உந்தலுடன் வாசலை விட்டு எழுந்திருந்த கிழவி உள்ளுக்குள் போய் அலமாரியில் வைத்திருந்த ஹேர்-டை பாக்கெட்டை எடுத்துக் கொண்டு அதை தண்ணீரில் கலக்கி தலையில் பூசத் தொடங்கினாள்.”18 என்னும் கதையின் முடிவின் மூலம் தெளிவாக நாம் உணரலாம்.

**வரதட்சனை**

இன்னும் பெண்கள் என்ற கதையில் வரதட்சனைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இக்கதையில் தன் தங்கை விமலா என்பவளுக்கு திருமணம் செய்ய இயலாத நிலையில் இருந்த கங்காதரன் தனக்கு தற்போதுதான் புதிதாக திருமணமாகியிருந்தாலும் கட்சித்தலைவர் நடத்தும் இலவசத் திருமணத்தில் கலந்துகொண்டு, கங்காதரனும் கோமதியும் திருமணம் செய்வதால் இலவசமாக அவர்கள் கொடுக்கும் சீர்களைக்கொண்டு விமலாவிற்கு திருமணம் செய்துவைக்கலாம் என்ற முடிவை எடுக்கின்றனர். இல்லையேல் பூவாத்தாள் போல விமலாவிற்கு திருமணம் எட்டாக்கனியாகிவிடும் என்று அஞ்சினர். பொதுவாக “திருமணமும், குடும்பமும் ஆணிற்கு அல்லது ஆடவனுக்குப் பெண்ணை உடைமைப் பொருளாகி ஆளக் கூடிய அதிகாரத்தை வழங்குகின்றன. திருமண உறவிலும் சமூக வாழ்விலும் ஆடவனுக்குப் பெண் அடங்கிப் போவதற்கு இன்னமும் இதுவே அடித்தளமாகி பெண்ணிற்கு எதிரான வன்முறைக்கு வழிகோலுகிறது.”19 என்று அரங்க மல்லிகா கூறுவதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, ஆணிணத்திற்கு தகுந்தவாறு பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதால் அடிமை நிலைக்கு ஆட்படுத்துகிறோம் என்பதை இக்கூற்றின் மூலம் தெளிவாக உணரலாம். மேலும், “பெண்களை புருசனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும் கீர்த்தி புகழ்பெறும் பெண்ணும் யாக்கவும் வேண்டும். பெண்ணும் தன்னை பெண்ணினம் என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கவே கூடாது. நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? உயர்வு-தாழ்வு ஏன்? என்ற எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எழ வேண்டும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் நம் பெண்கள் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படக்கூடாது. அவர்கள் புது உலகத்தைச் சித்தரிக்க வேண்டும்.”20 என்ற பெரியாரின் கூற்றை இவ்விடத்தில் நாம் பொருத்திப் பார்க்கவேண்டும்.

பெண்கள் நிலை என்னும் இவ்வாய்வின் வழி பெண்ணினத்தைப் பற்றியும், அடிமைப்படுத்தப்பட்;ட நிலையும் இலக்கியங்களில் பெண்கள் அடிமைப்பட்டிருந்த நிலையையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மாலை சூடும் அரும்புகள், ஓடிப்போனவள், இன்னொருவனுடன், இன்னும் பெண்கள், கருத்தம்மாள், துளிர்க்கும் சருகுகள் என்னும் கதையின் வாயிலாக குழந்தைத் திருமணம், ஆடவர் இன்னல், மறுமணம், வரதட்சனை, விதவையின் இன்னல், முதுமைப் பெண்களின் நிலை ஆகியவற்றைப் பற்றி தெளிவாக அறிகின்றோம். பெண் என்பவள் காலந்தோறும் அடிமைப்பட்டு வாழ்ந்தவளாக இருக்கிறாள். இதனை தமிழ் இலக்கியங்களின் வழி அறியலாம். பெண்கள் தனித்து வாழ்பவர்களாக இருக்க முடியாது என்பதால் பிறரைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் பெண்கள் அடிமையாக இருக்கின்றனர். கணவனிடம் மனைவியாகவும், சகோதரனிடம் சகோதரியாகவும், தந்தையிடம் மகளாகவும், சமுதாயத்தில் பொருளாகவும் போன்ற நிலைகளில் பின்தங்கிய நிலையிலும் எதையும் எதிர்த்துப் பேச முடியாதவர்களாக உள்ளனர். இன்றும் ஆண்களிடம் அடங்கிப்போகவேண்டிய கட்டாய சூழ்நிலை பெண்களிடம் வெளிப்படையாகவே அமைந்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. முனைவர் சி.வாசுகி, பெண்ணியம்-அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.14
2. மேலது, ப.15
3. க.ப.அறவாணன், தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், ப.99
4. வ.த.இராமசுப்பிரமணியம், தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.34
5. மேலது, ப.35
6. மு.கருணாநிதி, திருக்குறள்-உரையுடன், ப.89
7. அல்லிநகரம் தாமோதரன், மாலை சூடும் அரும்புகள், ப.2
8. மேலது, ப.3
9. இ.சுந்தரமூர்த்தி, பாரதியார் கவிதைகள், ப.34
10. அல்லிநகரம் தாமோதரன், மாலை சூடும் அரும்புகள், ப.19
11. மேலது
12. முனைவர்.சரளா இராசகோபாலன், திரு.வி.க-வின் பெண்ணியச் சிந்தனைகள், ப.120
13. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், தமிழ் நாவல்களில் பெண்ணியம், ப.69
14. டாக்டர்.சிவ.சீதளா, பெண்ணியம், ப.60
15. அல்லிநகரம் தாமோதரன், மாலை சூடும் அரும்புகள், பக்.92-93
16. சே. சீனிவாசன், பத்தொன்பதாம் நூற்றாண்டு இதழ்களில் பெண், ப.117
17. அல்லிநகரம் தாமோதரன், மாலை சூடும் அரும்புகள், ப.102
18. மேலது, ப.107
19. அரங்க மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.106
20. கி.வீரமணி, பெரியாரின் சுயமரியாதைத் திருமணம் ஏன்?, ப.12


**Reference Explanation**


1. Dr. C. Vasuki, Feminism - Approaches and Literary Applications, p. 14
2. Ibid., p. 15
3. K. P. Aravanan, Cultural Invasions on Tamils, p. 99
4. V. T. Ramasubramaniam, Tholkappiyam Porulathikaram, p. 34
5. Ibid., p. 35
6. M. Karunanidhi, Thirukkural - with commentary, p. 89

7. Allinagaram Damodaran, Buds that wear garlands, p. 2
8. Ibid., p. 3
9. E. Sundaramurthy, Bharathiyar's Poems, p. 34
10. Allinagaram Damodaran, Buds that wear garlands, p. 19
11. Ibid.,
12. Dr. Sarala Rajagopalan, Thiru. V.K.'s Feminist Thoughts, p. 120
13. Professors of the Department of Tamil, Feminism in Tamil Novels, p. 69
14. Dr. Siva Seethala, Feminism, p. 60
15. Allinagaram Damodaran, Buds that Wear Garlands, pp. 92-93
16. S. Srinivasan, Woman in Nineteenth-Century Journals, p. 117
17. Allinagaram Damodaran, Blossoms Adorned with Garlands, p. 102
18. Ibid., p. 107
19. Aranga Mallika, Tamil Literature and Feminism, p. 106
20. K. Veeramani, Why Periyar's Self-Respect Marriage?, p. 12